செய்தி வெளியீடு எண் : 1433 நாள் : 18.08.2022

**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்**

**செய்தி வெளியீடு**

**தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்/பழங்குடியின பட்டதாரிகள் வங்கி தேர்வில் வெற்றி பெற Veranda Race நிறுவனத்தால் இலவச பயிற்சி வழங்கும் திட்டம்**

தாட்கோ நிறுவனம் ஆதிதிராவிடர்/பழங்குடியின பிரிவினைச் சார்ந்தவர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சி திட்டங்களை வழங்கி வருகிறது. வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே IBPS ஆல் நடத்தப்படும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வங்கி தேர்வுகளில் ஒன்றான IBPS CRP PO/MT CRP-XII 2022 ஆம் ஆண்டிற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு www.ibps.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. IBPS CRP PO/MT CRP-XII 2022 தேர்வானது 11 பொதுத்துறை வங்கிகளில் பணிபுரிய மொத்தம் 6,932 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது. இதில் 20 முதல் 35 வயது வரை உள்ள ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு முடித்த (Such as BA, B.Com, BSc, B.Tech, etc)அனைத்து ஆதிதிராவிடர் / பழங்குடியின பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம். 22.08.2022ஆம் தேதிக்குள் www.ibps.in என்ற இணையதளம் வழியாக விண்ணப்பிக்க வேண்டும். தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை மற்றும் தேர்வு நடைபெறும் முறை அனைத்தும் இணையதளம் வழியாக நடைபெறும்.

இப்பதவிக்கான தேர்வு முறையானது 3 முறைகளில் நடைபெற உள்ளது. முதல் நிலைத்தேர்வு(Prelims), முதன்மைத் தேர்வு(Mains) மற்றும் நேர்காணல்(Interview). முதல் நிலைத்தேர்வானது அக்டோபர் 15, 16, 22 ஆகிய தேதிகளிலும், முதன்மைத் தேர்வானது 26 நவம்பர் 2022 அன்றும், நேர்காணலுக்கான அழைப்பு ஜனவரி/பிப்ரவரி 2023 அன்றும் நடைபெற உள்ளதாக IBPS ஆல் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கால மாத சம்பளமாக ரூ.52,000/– முதல் ரூ.55,000/– வரை பெறலாம். இப்போட்டி தேர்வில் வெற்றி பெற்று வங்கியில் பணியமர வேண்டுமென Veranda RACE நிறுவனத்தின் மூலம் ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணவர்களுக்கு இலவச பயிற்சி வழங்க தாட்கோ

நிறுவனமானது முடிவு செய்துள்ளது. இப்பயிற்சியினை பெற www.tahdco.com என்ற இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். பயிற்சிக்கான கட்டணம் தாட்கோவால் வழங்கப்படும்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in